# Prosodic Studies: Accomplishments and Future Directives

**Dr. K. Mutharpavalar**
*Assistant Professor, Department of Tamil (Self-Financed)*
*Madras Christian College (Autonomous), Tambaram, Chennai*

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: ஜனவரி

வருடம்: 2026

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

DOI:
https://doi.org/10.5281/zenodo.18981756

**Abstract**

*The venerable Tamil language boasts a rich heritage of literature and grammar. Throughout its evolution, both literary and grammatical forms have undergone significant transformation and advancement. This paper delineates scholarly investigations into Tamil prosody that have been completed and identifies areas necessitating further inquiry. Tholkappiyam's 'Seyyuliyal' stands as the foundational text in prosodic studies. The analysis further elucidates the progression of prosody within subsequent grammatical treatises and examines prosodic elements embedded within literary works.*

***Keywords:*** *Tholkappiyam Seyyuliyal, Prosodic Grammatical Texts, Prosodic Evolution, Literary Classifications, Textual Analyses, Doctoral Dissertations.*

**References**

1. Kandasamy, S.N., The Origin and Development of Tamil Prosody, Part One - Section One, Tamil University, Thanjavur, First Edition, 1989.
2. Satheesh, A., Kanniyam, Tamil Prosodic Traditions: Purananooru Prosody, New Century Book House, Chennai, First Edition, 2014.
3. Manikandan, Y., Development of Prosodic Grammar in Tamil, Vizhigal Pathippagam, Chennai, First Edition, 2001.
4. Muthupavalar, K., Sampathkumar, J., Prakash, M., Sankari, P. (Eds.), Uzignai Tamil Studies History, Narumugai, Senji, 2016.
5. Muthupavalar, K., Tholkappiyam's Poetic Constituents, Muthamizh Nilayam, Eappakkam, 2021.

# யாப்பியல் ஆய்வுகள்: நிகழ்ந்தனவும் நிகழ்த்தப்பட வேண்டியனவும்

***முனைவர் கு. முதற்பாவலர்***
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை (தன்நிதிப் பிரிவு)
சென்னைக் கிறித்தவக் கல்லூரி (தன்னாட்சி), சென்னை

***ஆய்வுச் சுருக்கம்***
*தொன்மை மிக்க தமிழ்மொழி, வளமிக்க இலக்கியங்களையும் இலக்கணங்களையும் கொண்டதாக விளங்குகின்றது. காலந்தோறும் இலக்கியத்திலும் இலக்கணத்திலும் மாற்றமும் வளர்ச்சியும் ஏற்பட்டுள்ளன. தமிழ் யாப்பியல் தொடர்பாக நிகழ்த்தப்பட்ட ஆய்வுகளையும் இனி நிகழ்த்த வேண்டிய ஆய்வுகளும் இக்கட்டுரையில் இடம்பெற்றுள்ளன. யாப்பியல் குறித்த நூல்களில் முதலில் தொல்காப்பியச் செய்யுளியல் இடம்பெறுகின்றது. அதனைத் தொடர்ந்து வந்த இலக்கண நூல்களின் யாப்பியல் வளர்ச்சி, இலக்கியங்களில் அமைந்துள்ள யாப்பியல் செய்திகள் குறித்த ஆய்வுகள் விளக்கப்பெற்றுள்ளன.*

***திறவுச் சொற்கள்:*** *தொல்காப்பியச் செய்யுளியல், யாப்பிலக்கண நூல்கள், யாப்பியல் வளர்ச்சி, இலக்கிய வகைகள், நூலாய்வுகள், முனைவர் பட்ட ஆய்வுகள்.*

தொல்காப்பியம் குறித்துப் பல்வேறு ஆய்வுகள் தோன்றியுள்ளன. அவற்றுள் தொல்காப்பியம் கூறும் செய்யுள் உறுப்புகள் தொடர்பாகக் குறிப்பிடத்தக்க ஆய்வுகள் நிகழ்ந்துள்ளன. தமிழ் யாப்பியலை ஆராய்ந்த ஆய்வாளர் பலரும் தொல்காப்பியச் செய்யுளியலின் யாப்பியல் செய்திகளை ஆராய்ந்துள்ளனர். அ. சிதம்பரநாதன் செட்டியார், சோ.ந. கந்தசாமி, ய. மணிகண்டன் முதலியோர் தமிழ் யாப்பிலக்கண வளர்ச்சி தொடர்பான ஆய்வுகளில் தொல்காப்பியச் செய்யுளியல் தொடர்பான செய்திகளைப் பகுதி நிலையில் குறிப்பிட்டுள்ளனர்.

தமிழண்ணலின் "நோக்கு" *(1985)*, "சங்க இலக்கிய ஒப்பீடு - இலக்கிய வகைகள்" *(இரண்டாம் பதிப்பு, 2011)*, "சங்க இலக்கிய ஒப்பீடு - இலக்கியக் கொள்கைகள்" *(நான்காம் பதிப்பு, 2014)*, "தொல்காப்பியரின் இலக்கியக் கொள்கைகள்" *(பாகம்-1 இரண்டாம் பதிப்பு, 2011, பாகம் - 2, 2012)* ஆகிய நூல்களும் செ.வை. சண்முகத்தின் "பொருளிலக்கணக் கோட்பாடு தொல்காப்பியம் தொகுதி - 2 யாப்பும்நோக்கும்" *(2011)* என்னும்நூலும், இரா. இராசகோபாலனின் "இலக்கிய வனப்புகள்" *(1987)* என்னும் நூலும் இத்தொடர்பில் குறிப்பிடத்தக்கன.

அ. சண்முகதாஸின் "தமிழின் பா வடிவங்கள்" *(1998)* என்னும் நூல் வரலாற்றுப் பின்னணியில் தமிழ்ப் பா வடிவங்களை விளக்கியுள்ளது. ந.வீ.செயராமனின் "யாப்பியல் திறனாய்வுசு *(2000)* என்னும் நூல் தமிழ் யாப்பியலைத் தொல்காப்பியம் கூறும் மரபு பிற்கால யாப்பிலக்கண நூல்கள் கூறும் மரபு என்னும் அடிப்படையில் ஆராய்ந்துள்ளது. அடிகளாசிரியரின், "தொல்காப்பியச் செய்யுளியல் ஆராய்ச்சி" *(2008)* என்னும்நூல் தொல்காப்பியச் செய்யுளியலை ஆராய்ந்துள்ளது. இரா. இராசேந்திரனின் "காக்கைபாடினியமும் தொல்காப்பியச் செய்யுளியலும் ஒப்பாய்வு" *(2010)* என்னும் நூல் தொல்காப்பிய யாப்பியலையும் காக்கைபாடினிய யாப்பியலையும் ஆராய்ந்திருக்கின்றது.

தொல்காப்பியச் செய்யுளியலை மட்டும் தனித்த ஆய்வுப் பொருளாகக் கொண்ட ஆய்வுகளும் நிகழ்ந்துள்ளன. அவற்றுள், "தொல்காப்பியக் கவிதையியல்" வடிவம் -

*பாடுபொருள் - உத்தி - வகைகள் (2015) என்னும் நூலை இரா. சம்பத் (ப.ஆ.) புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனத்தின் மூலம் வெளியிட்டுள்ளார். அதைப்போலவே உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் மூலம் இரா. சீனிவாசன், சே.சீனிவாசன் ஆகியோரைப்பதிப்பாசிரியராகக் கொண்டு வெளிவந்த நூல் "தொல்காப்பியச் செய்யுளியல்: புலநெறி இலக்கிய வழக்கு" (2015) இவ்விரண்டு நூல்களும் தொல்காப்பியச் செய்யுளியல் குறித்து நிகழ்த்தபப்பட்ட பயிலரங்கு உரைகளின் தொகுப்பாகும்.*

*தொல்காப்பியச் செய்யுளியலில் இடம்பெற்றுள்ள வடிவ உறுப்புகள், ஒலி உறுப்புகள், வனப்புறுப்புகள் முதலியவற்றை மட்டும் மையமாகக் கொண்டுச் சென்னைப் பல்கலைக்கழகத்தில் "தொல்காப்பியச் செய்யுள் உறுப்புகள் உரையாசிரியர்கள் நோக்கு" (2017) என்னும் தலைப்பில் கு. முதற்பாவலர் முனைவர் பட்ட ஆய்வினை நிகழ்த்தியுள்ளார். இவ்வாய்வேடு பின்னர் 2021இல் முத்தமிழ் நிலையத்தில் நூலாகவும் வெளிவந்துள்ளது குறிப்பிடத்தக்கது. மேலும் பெ. மாதையன் "தொல்காப்பியச் செய்யுள் உறுப்புகள் - மீள்வாசிப்பு" (2023) என்னும் நூலை எழுதியுள்ளார். இதில் முன்னம், துறை, களம், காலம், நோக்கு, பொருள்வகை, யாப்பு முதலிய தொல்காப்பியச் செய்யுள் உறுப்புகள் ஆராயப்பெற்றுள்ன.*

*பா. ஜெய்கணேஷின் "தமிழ் இலக்கண உரை வரலாறு: யாப்பியல் உரைகள்" (2009), கன்னியம் அ. சதீஷின் "தமிழ் யாப்பியல் மரபுகளும் புறநானூற்று யாப்பியலும்" (2011), ஆ. வேலுமணியின் "செய்யுளியல் கோட்படுகள் - தொல்காப்பியம் முதல் இலக்கணவிளக்கம் வரை" (2012), மு. கஸ்தூரியின் "பத்துப்பாட்டு யாப்பியல்" (2014) முதலியவை பகுதி நிலையில் தொல்காப்பியம் குறிப்பிடும் செய்யுள் உறுப்புகள் பற்றிப் பேசியுள்ளன.*

## யாப்பிலக்கண வளர்ச்சியினை ஆராய்ந்த ஆய்வுகள்

*தமிழ் யாப்பியலை முதன்முதலில் ஆராய்ந்த அ. சிதம்பரநாதன் செட்டியாரின் "தமிழ் யாப்பியல் உயராய்வு"* (Advanced Studies in Tamil Prosody (being a history of Tamil Prosody upto the 10th Century A.D.), ***1943)*** *என்னும் ஆய்வேடு தொல்காப்பியம் தொடங்கிப் பத்தாம் நூற்றாண்டு வரையிலான யாப்பியலை ஆராய்கையில் தொல்காப்பியம் குறிப்பிடும் செய்யுள் உறுப்புகள் குறித்து உரையாசிரியர்கள் தரும் கருத்துகளையும் உள்ளடக்கி ஆராய்ந்திருக்கின்றது. அன்னிதாமசின் "காலந்தோறும் தமிழ் யாப்பு"* (Tamil Prosody through the Ages, ***1974)*** *என்னும் ஆய்வேடு பகுதி நிலையில் ஆராய்ந்துள்ளது. சோ.ந. கந்தசாமியின் "தமிழ் யாப்பியலின் தோற்றமும் வளர்ச்சியும்" (முதல் தொகுதி - முதற்பாகம்,1989) என்னும் நூல் தொல்காப்பியம் தொடங்கிப் பின்னர் வந்த அனைத்து யாப்பிலக்கண மரபுகளையும் வளர்ச்சி நிலைகளையும் ஆராய்ந்திருக்கின்றது. தமிழ் யாப்பியலை ஆராய்ந்த முனைவர்பட்ட ஆய்வுகள் சில யாப்பிலக்கண வளர்ச்சி வரலாற்றை ஆராய்ந்துள்ளன அவற்றுள், இரா. இராசேந்திரனின் "தமிழ் யாப்பிலக்கண வளர்ச்சி" (1992), ய.மணிகண்டனின் "தமிழில் யாப்பிலக்கண வளர்ச்சி" (2000), சந்திரா கிருஷ்ணனின் "தொல்காப்பியச் செய்யுளியல் யாப்பருங்கலம் - ஒப்பாய்வு" (2000) ஆகியன குறிப்பிடத்தக்க ஆய்வுகள் ஆகும்.*

## இலக்கியங்களில் அமைந்துள்ள யாப்பியல் குறித்த ஆய்வுகள்

*இலக்கியங்களில் உள்ள யாப்பியல் கூறுகளை எடுத்துக்காட்டும் முதன்மையான ஆய்வாக ந.வீ.செயராமன் "சிலப்பதிகார யாப்பமைதி" (1977), அ.பிச்சையின் "சங்க யாப்பு" (1980) குறிப்பிடலாம். இதனைத் தொடர்ந்து கன்னியம் அ. சதிஷின் "தமிழ் யாப்பியல் மரபுகளும் புறநானூற்று யாப்பியலும்" (2011), மு. கஸ்தூரியின் "பத்துபாட்டு யாப்பியல்" (2009), ம. மகாலெட்சுமியின் "தமிழ்க் காப்பியங்களின்*

யாப்பமைதி சிறப்பாய்வு: வில்லிபாரதம்" (2009), ச. பாரதியின் "சீவகசிந்தாமணியின் யாப்பமைதி" (2012), மா. பூங்குமரியின் "பெரிய புராண யாப்பியல்" (2011), ப. திருஞானசம பந்தத்தின் "பதினெண் கீழ்க்கணக்கு யாப்பியல்" (2014), அ. மோகனாவின் "தேவார யாப்பியல்" (2015) க. சசியின் "கந்தபுராண யாப்பியல்" (2016), ச. உமாதேவியின் "திருவிளையாடற் புராண யாப்பியல்" (2018), ஜெ. இராதாகிருஷ்ணனின் "பிரபந்த யாப்பியல்: கலம்பகம்" (2018) முதலிய ஆய்வுகள் தமிழில் உள்ள இலக்கிய வகைகள் குறித்த ஆய்வுகளாகும். மேலும் கச்சியப்ப முனிவரின் யாப்பியல் (2022), கிறித்தவக் காப்பியங்களின் யாப்பியல், பள்ளு (2022), குறவஞ்சியின் யாப்பியல் (2023), தனிப்பாடல்களின் யாப்பியல் (2025) என்னும் தலைப்புகளில் முறையே லோகேஸ்வரி, கா. லாரன்ஸ் ஜோசப் ஜெபரத்தினம், ஏ. கவிதா, சி. இளங்கோ ஆகியோர் ஆய்வு செய்துள்ளனர். இவையாவும் குறிப்பிட்ட இலக்கியத்தில் அமைந்துள்ள யாப்பியலைச் சிறப்பாக ஆராய்ந்துள்ளன. பா வடிவங்க, இன வடிவங்கள், இனவினங்கள், மோனை, எதுகை உள்ளிட்ட தொடை நலன்கள் முதலிய யாப்பியல் கூறுகளை நுட்பமாக ஆராய்ந்து வெளிப்படுத்திய ஆய்வுகள் ஆகும்.

அ. பிச்சை, ந.வீ. செயராமன் ஆகியோரின் ஆய்வுகளைத் தவிர மிற்ற ஆய்வுகள் யாவும் சென்னைப் பல்கலைக்கழகத்தில் ய. மணிக ண்டனின் மேற்பார்வையில் நிகழ்த்தப்பெற்ற முனைவர் பட்ட ஆய்வுகள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

யாப்பியலில் உறுப்புகளில் ஒன்றான பா வடிவங்களின் வளர்ச்சி, வரலாற்றைக் குறிப்பிடும் ஆய்வுகளாக "தமிழ் யாப்பு வடிவ வளர்ச்சி வரலாறு: வெண்பா யாப்பு" (2009), தமிழ்ப் பா வடிவங்கள் : வஞ்சிப்பா" (2004), "தமிழ்ப் பா வடிவங்கள் : கட்டளைப் பாக்கள்" (2009), தமிழ் யாப்பு வடிவ வளர்ச்சி வரலாறு : குறள் வெண்பா யாப்பு (2010) போன்றவற்றைக் குறிப்பிடலாம். மேலும் யாப்பியல் குறித்த ஆய்வியல் நிறைஞர் பட்ட ஆய்வுகளின் பட்டியல் பின்னிணைப்பில் அளிக்கப்பட்டுள்ளது.

யாப்பியல் கலைச்சொல்லகராதி அகர வரிசைப்படுத்திப் பொருள் கூறும் வகையில் அமைந்த யாப்பியல் கலைச்சொல்லகராதி (1983) என்ற ஆய்வேடு இரு பகுதிகளையுடையது. முதல் பகுதி யாப்பியல் வளர்ச்சி வரலாறு, யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை வேறுபாடு கலைச்சொல்லகராதி - வளர்ச்சி வரலாறு எனவும், இரண்டாம் பகுதி யாப்பியல் கலைச் சொல்லகராதி (கலம், காரிகை மட்டும்) எனவும் அமைந்துள்ளது.

## நிகழ்த்த வேண்டிய யாப்பியல் ஆய்வுகள்

தொல்காப்பியம் முதல் பல்வேறு இலக்கணங்கள், சங்க இலக்கியம் முதல் பல்வேறு இலக்கிய வகைகள் குறித்த யாப்பியல் ஆய்வுகள் கனிசமான அளவில் நடைபெற்றுள்ளன. இதில் பெரும்பாலான ஆய்வுகள் சென்னைப் பல்கலைக்கழகம், ய. மணிகண்டனின் மேற்பார்வையில் நிகழ்த்தப்பெற்ற ஆய்வுகள் ஆகும்.

தொல்காப்பியச் செய்யுளியலைப் பொறுத்தவரை அகப்பாட்டு உறுப்புகளான திணை, கூற்று, களம் முதலியவை சார்ந்த தனித்த ஆய்வுகள் நிகழ்த்தப்பட வேண்டும். தேவாரம், பெரிய புராண யாப்பியலைப் போல பிற பன்னிரு திருமுறைகள் குறித்த ஆய்வுகள் நிகழ்த்தப்பட வேண்டிய தேவை உள்ளது. அதைப்போலவே நாலாயிரத் திவ்ய பிரபந்தங்கள், சித்தர் இலக்கியங்கள், கலம்பகம், பள்ளு, குறவஞ்சி தவிர்த்த ஏனைய சிற்றிலக்கியங்கள் குறித்த தனித்த ஆய்வுகள் நிகழ்த்தப்பட வேண்டும்.

காலந்தோறும் தோன்றிய புலவர்களின் தனித்த யாப்பியல் ஆளுமையை வெளிப்படுத்தும் ஆய்வுகளும் காலத்தின் தேவையாக உள்ளது. அவ்வகையில் மாணிக்கவாசகர், திருமூலர், அருணகிரிநாதர், பட்டினத்தார், சிவப்பிரகாசர் முதலியோர் சார்ந்தும் இடைக்காலப் புலவர்களின் யாப்பியல் திறன்களை வெளிக்கொணரும் வகையில்

ஆய்வுகள் நிகழ்த்தப்படுமேயானால் எதிர்காலத்தில் ஓரளவேனும் யாப்பியல் குறித்த ஆய்வுகள் நிறைவளிக்கும் வகையில் அமையும். தற்போது உள்ள ஆய்வுச் சூழலில் இலக்கணங்கள் குறித்த ஆய்வுகள் அதிலும் குறிப்பாக யாப்பாய்வுகள் நிகழ்த்துவதில் ஆய்வாளர்கள் பலரும் ஆர்வம் காட்டுதில்லை என்பது வருத்தமளிக்கும் செய்தியாகும்.

## இணைப்பு

யாப்பியல் தொடர்பாக நடைபெற்றுள்ள சென்னைப் பல்கலைக்கழக ஆய்வியல் நிறைஞர் பட்ட ஆய்வுகளில் சில:

- நாராயணசாமி, சி.ஆர்., யாப்பருங்கலக் காரிகை குணசாகரர் உரை ஓர் ஆய்வு, சென்னைப் பல்கலைக்கழகம், 1980.
- தேவராசு, ந., யாப்பியல் கலைச் சொல்லகராதி, சென்னைப் பல்கலைக் கழகம், 1984.
- பிரசன்னா, செ.ரா., பதிப்புக்கலை வளர்ச்சி (யாப்பருங்கலக்காரிகை), சென்னைப் பல்கலைக்கழகம், 1984.
- சங்கரநாராயணன், பெ., காவடிச் சிந்தின் யாப்பமைப்பு, சென்னைப் பல்கலைக் கழகம், 1993.
- மணிகண்டன், ய., தமிழ் யாப்பியல் அடியமைப்பு, சென்னைப் பல்கலைக் கழகம், 1996.
- ஜீவானந்தம், இரா., த. சரவணத்தமிழனின் யாப்புநூல், சென்னைப் பல்கலைக்கழகம், 2008.
- செந்தில், கு.சு., அட்டப்பிரபந்த யாப்பமைதி, சென்னைப் பல்கலைக்கழகம், 2008.
- தங்கலட்சுமி, நா, பள்ளு இலக்கியங்களில் யாப்பமைதி, சென்னைப் பல்கலைக்கழகம், 2008.
- இரமேஷ், தி.அ., தமிழ்ப் பா வடிவங்கள்: கட்டளைப் பாக்கள், சென்னைப் பல்கலைக்கழகம், 2009.
- சசி, க., தமிழ் யாப்பு வடிவ வளர்ச்சி வரலாறு : குறள் வெண்பா, சென்னைப் பல்கலைக்கழகம், 2010.
- வெங்கடேசன், அ., நீலகேசியின் யாப்பியல், சென்னைப் பல்கலைக்கழகம், 2011.
- சங்கீதா, தனிப்பாடல் திரட்டின் யாப்பமைதி (வெண்பா, ஆசிரியப்பா நீங்கலாக), சென்னைப் பல்கலைக்கழகம், 2013.
- சத்தியா, நா., அரிச்சந்திர புராணத்தில் யாப்பமைதி, சென்னைப் பல்கலைக் கழகம், 2013.
- நிறைமதி., மேருமந்திர புராணத்தின் யாப்பமைதி, சென்னைப் பல்கலைக்கழகம், 2013.
- மகேஷ், சு., மெய்கண்ட சாஸ்திரத்தின் யாப்பமைதி, சென்னைப பல்கலைக் கழகம், 2013.
- மாலதி, பி.தி., தமிழ்ஒளி கவிதைகள் யாப்பமைதி, சென்னைப் பல்கலைக்கழகம், 2013.
- மதிவேந்தன், ஜெ., பெருஞ்சித்திரனார் பாடல்களில் யாப்பமைதி, சென்னைப் பல்கலைக்கழகம், 2014.

## துணைநூற்பட்டியல்


1. கந்தசாமி, சோ.ந., தமிழ் யாப்பியலின் தோற்றமும் வளர்ச்சியும் முதற்பாகம் - முதற்பகுதி, தமிழ்ப்பல்கலைக் கழகம், தஞ்சாவூர், முதற்பதிப்பு, 1989.
2. சதீஷ், அ., கன்னியம், தமிழ் யாப்பு மரபுகள் புறநானூற்று யாப்பியல், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, முதற்பதிப்பு, 2014.
3. மணிகண்டன், ய., தமிழில் யாப்பிலக்கண வளர்ச்சி, விழிகள் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, 2001.
4. முதற்பாவலர், கு., சம்பத்குமார், ஜோ., பிரகாஷ், ம., சங்கரி, பூ, (தொ.ர்.), உழிஞை தமிழியல் ஆய்வு வரலாறு, நறுமுகை, செஞ்சி, 2016.
5. முதற்பாவலர், கு. தொல்காப்பியச் செய்யுள் உறுப்புகள், முத்தமிழ் நிலையம், ஏப்பாக்கம், 2021.